بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 09/09/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 32 அன்னாரது வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் புகழத்தக்க பண்புகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வாழ்க்கையின் சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வஃபாத்தின் நேரம் நெருங்கிய போது, அன்னார் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும், 'எனக்கு உமர் அவர்களைப் பற்றிக் கூறுங்கள்' என்று கூறினார்கள். அப்போது, அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரின் கலீஃபா அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் தங்களது கருத்தை விடவும் மிகச் சிறந்தவராவார். அவர்களது இயல்பில் இருக்கின்ற கடுமையைத் தவிர' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'அவர்கள் என்னிடம் மென்மையைக் காண்பதால் கடுமை இருக்கின்றது. தலைமை பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டால், அவர்கள் தம்மிடம் இருக்கின்ற பல விஷயங்களை விட்டு விடுவார்கள்' என்று கூறினார்கள். அதற்குப் பிறகு, அன்னார், ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும், அவர்களிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி வினவினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், 'அவர்களது அகம் அவர்களது புறத்தை விடவும் சிறந்ததாகும். மேலும், நம்மில் அவரைப் போன்று எவரும் இல்லை' என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இரண்டு சஹாபிகளிடமும், 'நான் உங்கள் இருவரிடமும் கூறியதை வேறு எவரிடமும் கூறாதீர்கள். நான் உமரை விட்டு விட்டால், உஸ்மானைத் தாண்டி செல்ல மாட்டேன். மேலும், உங்களது விவகாரங்களைப் பற்றி எவ்வித குறையும் வைப்பதற்கான அதிகாரம் அவருக்கு இருக்காது. தற்போது நான் உங்களது விவகாரங்களை விட்டு தனித்து விடுவதும், உங்களுக்கு முன்சென்றோர்களைச் சேர்ந்தவர் ஆகிவிடவதுமே எனது விருப்பமாகும்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை கலீஃபாவாக ஆக்குவது தொடர்பாக தம் சிந்தனையில் இருந்த கருத்தை கூறியதற்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அல்லாஹ்வைக் கொண்டு என்னை அச்சுறுத்துகிறீர்களா? நான் எனது இறைவனை சந்திக்கும் போது, அவன் என்னிடம் கேட்டால், 'நான் உனது அடியார்களுள் மிகச் சிறந்தவரை உனது அடியார்களின் கலீஃபாவாக ஆக்கினேன்' என்று கூறுவேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: சமுதாயத்தின் தேர்தல் மூலமாகவே எவரும் கலீஃபாவாக ஆக முடியும் என்றிருக்கும்போது, ஹஸ்ரத் அபூபக்ர்

(ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நியமித்தது ஏன் என்று கேட்கப்பட்டால், அதற்கான பதிலாவது, அன்னார் வெறுமனே நியமித்து விடவில்லை. மாறாக, முதலில் ஸஹாபிகளிடம் அன்னார் ஆலோசனை பெற்றது நிரூபணம் ஆகியுள்ளது. பிறகு, அன்னார் மஸ்ஜித் வந்து மக்களிடம், 'மக்களே! நான் சஹாபிகளிடம் ஆலோசனை பெற்ற பிறகு, எனக்குப் பிறகு கிலாஃபத்துக்காக உமரை விரும்பியுள்ளேன். உங்களுக்கும் அவர்களது கிலாஃபத்தில் உடன்பாடு உள்ளதா என்று கேட்டார்கள். அதற்கு மக்கள் அனைவரும் தங்களது விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். ஆக, இதுவும் ஒரு வகையில் தேர்தலாகவே இருந்தது. மற்ற கஃலீபாக்கள், கலீஃபாவின் வஃபாத்துக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருக்கும்போதே கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது நோய் மற்றும் வஃபாத் பற்றிய குறிப்பு தபரீயின் வரலாற்று நூலில் இவ்வாறு வந்துள்ளது: அன்னாரின் நோய்க்கான காரணம் இதுவாகும். ஜமாதியுல் ஆஹிர் ஏழாம் தேதி திங்கட்கிழமை அன்று அன்னார் குளித்தார்கள். அன்றைய தினம் அதிகமான குளிர் இருந்த காரணத்தினால் அன்னாருக்கு காய்ச்சல் வந்தது. அது 15 நாட்கள் வரை இருந்தது. எதுவரை என்றால். அன்னார் தொழுகைக்காக வெளியே வரவும் ஆற்றல் அற்றவராக இருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைத் தொழ வைத்து வருமாறு கட்டளையிட்டார்கள். மக்கள் நலம் விசாரிக்க வந்து கொண்டிருந்தார்கள். ஆனால், நாளுக்கு நாள் அன்னாரது உடல்நிலை மோசமாகிக் கொண்டே சென்றது. அக்காலத்தில் அன்னார் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட வீட்டில் வசித்து வந்தார்கள். (அது ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களது வீட்டிற்கு எதிரே இருந்தது) நோய்வாய்பட்ட காலத்தில் பெரும்பாலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரை கவனித்து வந்தார்கள். ஒருவர் அன்னாரிடம், 'மருத்துவரை அழைத்தால் நன்றாக இருக்கும்' என்று கூறினார். அதற்கு அன்னார், அல்லாஹ் என்னைப் பார்த்து விட்டான்' என்று கூறினார்கள். மக்கள், 'அவன் உங்களிடம் என்ன கூறினான்?' என்று கேட்டார்கள்.

அவன், اِنِّیۡ اَفۡعَلُ مَا اَشَاءُ நான் நாடுவதை செய்கிறேன் என்று கூறினான்' என்றார்கள்.

அன்னார் கூறியதன் பொருள், அல்லாஹுத்தஆலா என்னை தன்னிடம் அழைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவனது நாட்டமாக உள்ளது. வேறு எந்த மருத்துவரின் அவசியமும் இல்லை என்பதாகும்.

அன்னார் செவ்வாய்க்கிழமை மாலை, ஜமாதியுல் ஆஹிர் 22 ஆம் தேதி, ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு, தமது 63 வயதில் வஃபாத் ஆனார்கள். அன்னாரது கிலாஃபத் காலகட்டம் இரண்டு வருடங்கள் மூன்று மாதங்கள் 10 நாட்கள் இருந்தன. அன்னாரது உதடுகளால் உச்சரிக்கப்பட்ட இறுதி வார்த்தைகள் திருக்குர்ஆனின் இந்த அருளுக்குரிய வசனங்கள் ஆகும்:

تَوَفَّنِیۡ مُسۡلِمًا وَّاَلۡحِقۡنِیۡ بِالصّٰلِحِیۡنَ (சூரா யூஸுஃப்:102)

அதாவது, கட்டுப்பட்ட நிலையில் எனக்கு வஃபாத்தை வழங்குவாயாக! மேலும், என்னை நல்லடியார்களுடன் இணைத்து வைப்பாயாக என்பதாகும். அன்னாரது மோதிரத்தில் نِعۡمَ الۡقَادِرُ اللّٰهُ அதாவது, அல்லாஹ் எத்துனை வல்லமை படைத்தவன் என்று பொறிக்கப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'எனது நல்லடக்கத்தில் இருந்து விடுபட்ட பிறகு, வேறு ஏதேனும் பொருள்

எஞ்சி இருக்கவில்லையே என்று பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவேளை இருந்தால், அதனையும் உமர் அவர்களுக்கு அனுப்பி விடுங்கள்' என்று கூறினார்கள். அடக்கம் செய்வது பற்றி, 'தற்சமயம் இருக்கின்ற ஆடையையே சலவை செய்து மற்ற துணிகளுடன் அடக்கம் செய்யுங்கள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'இது பழையதாகும். கஃபன் அணிவிக்க புதிய துணி வேண்டும்' என்று கூறினார்கள். அதற்கு அன்னார், 'உயிருள்ளவர்கள் இறந்தவர்களைக் காட்டிலும் புதிய ஆடைகளுக்கு அதிக உரிமை உடையவர்கள் ஆவார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்னார், 'தம்முடைய மனைவி ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் தம்மைக் குளிப்பாட்ட வேண்டும்' என்று வலியுறுத்திக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது புதல்வர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் அவர்களுக்கு உதவி புரிந்தார்கள். அன்னாரது கஃபன் இரண்டு துணிகளில் செய்யப்பட்டது. அவற்றில் ஒன்று குளிப்பாட்ட பயன்படுவதாக இருந்தது. மூன்று துணிகளில் கஃபன் வழங்கப்பட்டது என்றும் அறிவிப்பு உள்ளது. பிறகு, அன்னார் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கட்டிலில் வைக்கப்பட்டார்கள். (ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அதில் உறங்கி வந்தார்கள்) அதே கட்டிலில் அன்னாரது ஜனாஸா சுமந்து செல்லப்பட்டது. மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது கபர் மற்றும் மிம்பருக்கு நடுவே அன்னாரது ஜனாஸா தொழுகையைத் தொழ வைத்தார்கள். மேலும், இரவு நேரத்தில், அதே அறையில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கபருடன் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அன்னாரது தலை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது தோளுக்கு நேராக வைக்கப்பட்டது. நல்லடக்கத்தின் போது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) ஆகியோர் கபரில் இறங்கினார்கள். மேலும், நல்லடக்கம் செய்தார்கள்.

அன்னாருக்கு நான்கு மனைவிமார்கள் இருந்தார்கள். குதைலா பின்த் அப்தில் உஸ்ஸா (ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) ஆகியோரது தாயார்), ஹஸ்ரத் உம்மு ரூமான் பின்த் ஆமீர் (ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களது தாயார்), ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) (முஹம்மது பின் அபீபக்ர் (ரலி) அவர்களது தாயார்) மற்றும் ஹஸ்ரத் ஹபீபா பின்த் ஹாரிஜா (ரலி) (ஹஸ்ரத் உம்மு குல்ஸூமின் தாயார்). உம்மு குல்ஸூம் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வஃபாத்திற்கு சிறிது நாட்கள் கழித்து பிறந்தார்கள்).

அன்னாருக்கு ஏதேனும் விவகாரம் முன்வரும்போது ஆலோசனை கூறுபவர்களிடம் ஆலோசனை கேட்க வேண்டி வந்தால், அன்னார் முஹாஜிர்களில் குறிப்பிட்ட சில சஹாபிகளை அழைப்பார்கள். அல்லது சில நேரங்களில், அதிக எண்ணிக்கையில் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளை ஒன்று கூட்டுவார்கள். அன்னார் பெரும் சஹாபிகளின் ஆலோசனையுடன் ஒரு வீட்டை பைத்துல் மாலின் பெயரில் ஒதுக்கி இருந்தார்கள். அன்னார் கஃலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அன்னாரது தேவைகளுக்கான ஏற்பாடும் பைத்துல் மாலின் வஸீஃபாவிலிருந்து செய்யப்பட்டது. (அது வருடத்திற்கு **3000** திர்ஹம் அல்லது ஒட்டுமொத்த கிலாஃபத் காலகட்டத்தில் **6000** திர்ஹம் ஆகும்.) மக்களால் செலவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட முதல் கண்காணிப்பாளராக அன்னார் இருந்தார்கள். அன்னார் பைத்துல் மாலில் இருந்து தமது மற்றும் குடும்பத்தினர்கள் உடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உதவித் தொகையைப் பெற்றார்கள் என்ற போதிலும், வஃபாத்தின் நேரத்தில் அனைத்து தொகையையும் திரும்ப செலுத்தி விட்டார்கள் என்று வரலாற்று நூல்களில் ஒன்றுபட்ட கருத்துடன் குறிப்பு கிடைக்கின்றது. அன்னார் கஸா (நீதித்)துறை மற்றும் பொது

முஸ்லிம்களின் வசதிக்காக மார்க்கத் தீர்ப்புகளுக்கான துறையையும் நிலைநாட்டினார்கள். அன்னாரது கிலாஃபத் காலகட்டத்தில் எழுத்துப் பணிகளுக்கான அமைப்பு நிறுவப்படவில்லை. ஆனால், அரசாங்க கட்டளைகள் மற்றும் உடன்படிக்கைகளை எழுத மற்றும் இதர எழுத்துப் பணிகளுக்காக சில மக்கள் குறிப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது காலத்தில் முறையான ராணுவ அமைப்பு ஏதும் இருக்கவில்லை. ஜிஹாதின்போது ஒவ்வொரு முஸ்லிமும் முஜாஹிதாக இருப்பார். படைகளைப் பிரித்தல், கோத்திரங்களின் அடிப்படையில் இருந்தது. ஒவ்வொரு கோத்திரத்தின் அமீரும் தனித்தனியாகவும் அவர்கள் அனைவருக்கும் அமீருக்கெல்லாம் அமீராக ஒரு பொறுப்பு இருந்தது. இது அன்னார் நிறுவியதாகும். அன்னார் போருக்கு செல்கின்ற தளபதிகள் மற்றும் கமாண்டர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குவார்கள்.

*இந்தக் குறிப்பில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், அன்னார் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களது படையை விளித்து கூறிய மதிநுட்பமிக்க அறிவுரைகளைப் பற்றி கூறினார்கள். மேலும், ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி) அவர்களை சிரியா போருக்காக அனுப்பிய போது வழங்கிய அறிவுரைகளை எடுத்துக் கூறியவாறு, கடந்த ஒரு குத்பாவில் நான் இதைக் குறிப்பிட்டுள்ளேன் என்றும் நினைவூட்டினார்கள். சில முக்கிய விஷயங்களை சுருக்கமாக மீண்டும் எடுத்துரைக்கின்றேன் என்று கூறினார்கள்.*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இது மிகவும் முக்கியமானதும் ஒவ்வொரு பொறுப்பாளரும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயங்களும் ஆகும். மேலும், இவற்றால் பணிகளில் அருள் உருவாகும் என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: “அல்லாஹ்வின் மீதான அச்சத்தைக் கட்டாயமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும், அவன் உங்களுடைய புறத்தைக் கண்காணிப்பது போன்றே அகத்தைக் கண்காணிக்கின்றான். தனது செயல்களின் வாயிலாக அனைவரையும் விட அதிகமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவரே மக்களில் அல்லாஹ்வுக்கு மிக அருகில் உள்ளவர் ஆவார். அறிவீனம் மற்றும் காழ்ப்புணர்ச்சியில் இருந்து தவிர்ந்திருக்க வேண்டும். அல்லாஹ்வுக்கு இந்த விஷயங்கள் முற்றிலும் பிடிக்காதவை ஆகும். நீங்கள் உங்களது படையுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுடன் நன்றாக நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு அறிவுரை வழங்கும்போது, சுருக்கமாக கூறுங்கள். ஏனென்றால், அதிகமாகப் பேசுவதனால் பல விஷயங்கள் மறக்கடிக்கப்பட்டு விடுகின்றன. நீங்கள் உங்களது ஆன்மாவைத் தூய்மையாக வைத்திருந்தால், மக்கள் உங்களுக்காக சீர்திருந்தி விடுவார்கள். மேலும், தொழுகைகளை அதன் நேரத்தில், ருகூ மற்றும் சஜ்தாக்களை முழுமைப்படுத்தியவாறு நிறைவேற்றுங்கள். எதிரிகளின் தூதுவர் உங்களிடம் வந்தால், அவருக்கு கண்ணியத்தை வழங்குங்கள். அவர்களை மிகக் குறைவாகவே தங்க விடுங்கள். அவர்களுக்கு உங்களது பணிகளைப் பற்றி தகவல் தெரிவிக்காதீர்கள். உங்களது பணியாள்களை அவர்களுடன் பேசுவதில் இருந்தும் தடுத்து விடுங்கள். நீங்கள் யாரிடமாவது ஏதேனும் ஆலோசனை பெற விரும்பினால், அனைத்து விஷயங்களையும் கூறி ஆலோசனை பெறுங்கள். ஆலோசனை கூறுபவரிடம் உங்களது விஷயங்களை மறைக்காதீர்கள். இல்லாவிடில், உங்களால் உங்களுக்கு இழப்பு ஏற்பட்டுவிடும். இரவு நேரங்களில் உங்களது நண்பர்களுடன் பேசுங்கள். மாலை நேரங்களில் அமருங்கள். அவர்களுள் மக்களைத் தேர்ந்தெடுங்கள். அவர்களிடம் பேசுங்கள். உங்களுக்கு தகவல்கள் கிடைத்துவிடும். பெரும்பாலும் தகவல் தராமலேயே திடீரென்று அவர்களது முகாம்களை மேற்பார்வையிடுங்கள். கண்காணிப்பும் அவசியமாகும். தங்களது பாதுகாப்பு (பணி) இடங்களில் அலட்சியமாக

இருப்பவர்களுக்கு நல்ல முறையில் பாடம் புகட்டுங்கள். தண்டனை வழங்குவதில் அவசரப்படாதீர்கள். முற்றிலும் அலட்சியப்படுத்தவும் செய்யாதீர்கள். உங்கள் படைகளைப் பொருட்படுத்தாதவர்களாக இருக்காதீர்கள். எல்லா நேரமும் உங்களது படைகளை வேவு பார்த்து கொண்டிருக்காதீர்கள். ஏனென்றால், இவ்வாறாக அவர்களுக்கு இழிவு நேரிடும். அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த ரகசியமான விஷயங்களை மற்ற யாரிடமும் எடுத்துரைக்காதீர்கள். வீணான மக்களுடன் அமராதீர்கள். உண்மையான மற்றும் விசுவாசம் மிக்க மக்களுடன் அமருங்கள். கோழைத்தனம் காட்டாதீர்கள். இல்லாவிடில், மக்களும் கோழையாகி விடுவார்கள். போர்ச் செல்வங்களின் விஷயத்தில் துரோகம் செய்வதிலிருந்தும் தவிர்ந்திருங்கள். இது தேவையுடைமைக்கு அருகில் கொண்டு செல்கிறது. மேலும், வெற்றியையும் (இறை) உதவியையும் தடுக்கின்றது.''

நான் பல விஷயங்களை எடுத்துரைத்துள்ளேன். இவற்றுள் புதிய சில விஷயங்கள் ராணுவ அதிகாரிகளுக்கு மட்டுமல்லாமல், நமது பொறுப்பாளர்களுக்கும் அவசியமானதாகும். அவற்றை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் பணியில் அருள் ஏற்படும்.

அன்னாரது கிலாஃபத் காலகட்டத்தில், இஸ்லாமிய நகரங்கள் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அவற்றில் அன்னார், அமீர்கள் மற்றும் கவர்னர்களை நியமித்தார்கள். மதீனா கிலாஃபத்தின் தலைமையகமாக இருந்தது. அங்கு அன்னார் கலீஃபாவாக இருந்தார்கள். அன்னார், ரஸூல் (ஸல்) அவர்களது நடைமுறையின் படி ஒரு சமுதாயத்திற்கு கவர்னரை நியமிக்கும் பொழுது, இந்த விஷயத்தை கவனத்தில் கொள்வார்கள். அதாவது, அந்த சமுதாயத்தில் நல்ல மற்றும் நற்செயலாற்றும் மக்கள் இருந்தால், அவர்களிலிருந்தே கவர்னரை நியமிப்பார்கள். பொறுப்பாளர்களுடைய தேர்வில் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. மேலும், நபி (ஸல்) அவர்களிடமிருந்து தர்பிய்யத் பெற்ற மனிதர் நியமிக்கப்பட்டார். ஒருபோதும் சமுதாயத்துடனான உறவு அல்லது நெருக்கத்தை கவனத்தில் கொண்டதில்லை. இந்தக் கடுமையான கோட்பாடு மற்றும் உயர்வான தரத்தின் விளைவால்தான், அன்னாரால் நியமிக்கப்பட்ட கவர்னர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் எப்போதும் தங்களது சிறந்த திறமைகளை முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாமிய தொண்டுக்காக பயன்படுத்தினார்கள். இந்தக் குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது. இன்ஷா அல்லாஹ் இனிமேலும் எடுத்துரைக்கப்படும்.

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ أَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)